Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 255/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | மோகப்பிரியா |
| Father's Name | -- | சிவசுப்பிரமணியம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது ஆர்.பொன்னாபுரத்தில் குடியிருந்துவருகிறேன். நான் தற்போது எம்காம் முதலாம் ஆண்டு பயின்றுவருகிறேன். கடந்த 20.11.2017 அன்று மதியம் 12.30 மணியளவில் எனது பெரியப்பா என்னை எனது கல்லூரிக்கு டிவிஎக்ஸ்ல் வாகனத்தில் அழைத்துச்சென்றுகொண்டிருந்தார். அப்போது விபத்து ஏற்பட்டது. நாங்கள் வடுகபாளையம் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக சென்றுகொண்டிருந்தபோது, சரவணா ஸ்டோர் அருகே எதிரே வந்த ஆட்டோ அதிவேகமாக வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் பெரியப்பாவிற்கு இடதுபக்க மண்டையிலும், வலது காலிலும் அடிபட்டது. எனக்கு வலது கண்ணிலும் இரண்டு காலிலும் அடிபட்டது. பின்பு எங்களை ஆம்புலன்ஸ் மூலமாக அருண் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். பின்னர் பெரியப்பாவினை மேல் சிகிச்சைக்காக கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் அனுமதித்தனர். சம்பவத்தன்று இரவு 9.20 மணியளவில் எனது பெரியப்பா அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தனர். ஆட்டோவின் பதிவு எண் TN41AM4650 ஆகும். ஆட்டோவினை ஓட்டிவந்தவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது)

சாட்சி எதிரியை அடையாளம் காட்டவேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2

பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 255/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | நாகராஜ் |
| Father's Name | -- | காளியப்பகவுண்டர் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது நல்லூரில் குடியிருந்துவருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். 20.11.2017 ம் அன்று மதியம் 12.30 மணியளவில் நான் பொன்னாபுரம் வழி வடுகபாளையம் ரோட்டில் அமைந்துள்ள சரவணா ஸ்டோர்ஸ் மளிகை கடையின் முன்பாக நின்றுகொண்டிருந்தேன். அப்போது மேற்படி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக மகாலிங்கம் வாகனத்தை ஓட்ட அசா.1 மோகனப்பிரியா டிவிஎக்ஸ்ல் வாகனத்தின் பின் அமர்ந்து வந்ததுகொண்டிருந்தார். விவேகானந்தன் என்னும் ஆட்டோக்காரர் கிழக்கிலிருந்து மேற்காக வந்து வடக்கே திரும்பும்போது எக்ஸ்ல் வாகனத்தின் மீது மோதி எக்ஸ்ல் வாகனத்தில் வந்த மகாலிங்கமும் மோகனப்பிரியாவும் கீழே விழுந்து, மகாலிங்கத்திற்கு தலையின் இடதுபுறத்திலும், காலிலும் அடிபட்டது. அசா.1 க்கு வலது கண் அருகிலும் காலிலும் அடிபட்டது. அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தார்கள். அவர்களை ஆம்புலன்ஸ் மூலமாக பொள்ளாச்சி அருண் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். ஆட்டாவின் பதிவு எண் TN41AM 4650 என்று நினைக்கிறேன். வருடங்கள் ஆகிவிட்டதார் சரியாக நினைவு கூற இயலவில்லை. ஆட்டோவினை ஓட்டிவந்தவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது)

சாட்சி எதிரியை அடையாளம் காட்டவேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 255/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | சந்தோஷ் |
| Father's Name | -- | சௌந்தராஜ் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது ஆர்.பொன்னாபுரத்தில் குடியிருந்துவருகிறேன். நான் ஹண்டாய் சேவை மையத்தில் பணிபுரிந்துவருகிறேன். கடந்த 20.11.2017 ம் அன்று மதியம் 12.30 மணியளவில் நான் பொன்னாபுரத்திற்கு வடுகபாளையம் வழியாக மதிய உணவிற்கு சென்றுகொண்டிருந்தபோது, எனக்கு முன்பாக ஒரு ஆட்டோ கிழக்கில் இருந்து மேற்காக சென்றுகொண்டிருந்தது. மேற்கிலிருந்து கிழக்காக ஒரு எக்ஸ்ல் வாகனம் வந்துகொண்டிருந்தது. மேற்படி எக்ஸ்ல் வாகனத்தினை மகாலிங்கம் ஓட்ட மோகனப்பிரியா பின் அமர்ந்துவந்துகொண்டிருந்தார். ஆட்டோ தனது வலது பக்கம் ஏறிவந்து மேற்படி டிவி எக்ஸல் வாகனம் மீது மோதி டம் என்ற சத்தம் கேட்டது. நான் பார்த்தபோது, மோகனப்பிரியாவும், மகாலிங்கமும் கீழே விழுந்துவிட்டார்கள். அவருக்கு காலிலும், தலையின் இடது பக்கத்தில் அடிபட்டது. மோகனப்பிரியாவிற்கு காலிலும், கண்ணுக்கு அருகிலும் காயம் ஏற்பட்டது. விசாரித்தபின்புதான் அவர்கள் இருவரும் பொன்னாபுரத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது. ஆட்டோவின் பதிவு எண் 3 ½ வருடங்கள் ஆகிவிட்டதால் நினைவு கூறஇயலவில்லை. ஆட்டோவினை ஓட்டிவந்தவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது) சாட்சி எதிரியை அடையாளம் காட்டவேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2

பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 255/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | பழனிச்சாமி |
| Father's Name | -- | மாரப்பகவுண்டர் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது ஆர்.பொன்னாபுரத்தில் குடியிருந்துவருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். கடந்த 20.11.2017 ம் அன்று மதியம் 12.30 மணியளவில் நான் பொள்ளாச்சிக்கு எனது எக்ஸல் வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன். அப்போது ஆட்டோ ஒன்று கிழக்கிலிருந்து மேற்காக வந்தது. எக்ஸல் வாகனம் ஒன்று மேற்கிலிருந்து கிழக்காக வந்தது. மகாலிங்கம் வாகனத்தை ஓட்ட அசா.1 பின் அமர்ந்து வந்துகொண்டிருந்தார். ஆட்டோ ஓட்டுநர் வலதுபுறமாக ஏறிவந்து எக்ஸலின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். விபத்தில் எக்ஸல் ல் வந்த இருவரும் தூக்கி எறியப்பட்டனர். அதில் மகாலிங்கத்திற்கு மண்டையிலும், காலிலும் அடிபட்டது. அசா.1 க்கு வலது கண்அருகேயும், காலில் அடிபட்டது. பின்பு ஆம்புலன்ஸ் வந்தது. அவர்களை பொள்ளாச்சி அருண் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். நான் மாலை 5 மணியளவில் அவர்களை மருத்துவமனையில் சென்று பார்த்தேன். மகாலிங்கத்தை மேல்சிகிச்சைக்காக கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். அன்றையதினமே இரவு 9.20 மணியளவில் மேற்படி மகாலிங்கம் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர். ஆட்டோவினை ஓட்டிவந்தவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது)

சாட்சி எதிரியை அடையாளம் காட்டவேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2, பொள்ளாச்சி